



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரஜப் பிறை 22 ஹிஜ்ரி 1437
Friday of Rajab 22nd Hijri 1437
29th April 2016

| | |
|---|---|
| தலைப்பு: | புனித மிஃராஜ் பயணம்! |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | புனித மிஃராஜ் பயணம்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் தன்னுடைய அடியார் (நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை) கஅபாவாகிய சிறப்பு பெற்ற பள்ளியில் இருந்து வெகு தூரத்தில் இருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான். தன்னுடைய மாபெரும் அத்தாட்சிகளை அவர்களுக்கு இறைவன் காட்டினான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(3:179)

فَآمِنُوا بِاللَّهِ وَرُسُلِهِ وَإِن تُؤْمِنُوا وَتَتَّقُوا فَلَكُمْ أَجْرٌ عَظِيمٌ

"ஆகவே, அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் (உண்மையாகவே அல்லாஹ்வை) நம்பிக்கை கொண்டு (அவனுக்குப்) பயந்து (நடந்து) கொண்டால் உங்களுக்கு மகத்தான (நற்)கூலி உண்டு"

**அல்லாஹ்வின் நல்லடியார்களே**! நிச்சயமாக அல்லாஹ் தஆலா இந்த மக்கள் அனைவருக்கும் நன்மையாகவும் கிருபையாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக தன்னுடைய நபியாகிய முஹம்மது ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பி வைத்துள்ளான். தெளிவான சிந்தனையோடு அந்த நபி மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். இந்த பொறுப்பை ஏற்று செய்யும் சமயங்களில் பல்வேறு வகையான நெருக்கடிகளையும், சோதனைகளையும் சந்தித்தார்கள். இதனால் தன்னுடைய ஆற்றலை வளப்படுத்தவும், அறிவுத்திறனை அதிகப்படுத்தவும் இறைவனிடம் மன்றாடி கேட்டார்கள். அவர்களின் நிலையை இறைவனும் கண்டு கொண்டான், அவர்களுடைய துஆவையும் கேட்டான். இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (17:1)

إِنَّهُ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ

"நிச்சயமாக (உங்களது இறைவன்) செவியுறுபவனாகவும், உற்று நோக்கினவனாகவும் இருக்கின்றான்"

எனவே அல்லாஹ் தஆலா தன்னுடைய நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இஸ்ரா எனும் இரவுப் பயணம் சென்று மிஃராஜ் எனும் விண்ணுலக பயணத்திற்கும் அழைத்துச் சென்று கண்ணியப்படுத்தினான். விண்ணில் வீற்றிருந்த நெருக்கமானவர்கள் மூலம் சிறப்பான வரவேற்பு அளித்து பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினான். இதனால் நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மன வேதனையும், ஆழ்ந்த கவலையும் மாறியது. துக்கங்கள் குறைந்து போனது, அவர்களின் மதிப்பும் மரியாதையும் கௌரவமும் மேலும் அதிகமானது. எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (53:9)

فَكَانَ قَابَ قَوْسَيْنِ أَوْ أَدْنَىٰ

"(சேர்ந்த) இரு வில்களைப் போல், அல்லது அதைவிட சமீபமாக அவர் நெருங்கினார்"

உண்மையில் நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய இறைவனுக்கு முழுமையாக கீழ்படிந்து, சிரம் பணிந்து நடந்ததால் இத்தகைய உயர்வான கண்ணியத்தை இறைவனிடம் பெற்றார்கள். இதனால்தான் இறைவன் தன்னுடைய நபியை "அடியார்" என்று சிறப்புப் படுத்தி கூறுகிறான்: (17:1)

سُبْحَانَ الَّذِي أَسْرَىٰ بِعَبْدِهِ

"(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்னும்) தன் "அடியாரை"(க் கஅபாவாகிய) சிறப்புற்ற பள்ளியில் இருந்து (வெகு தூரத்தில் இருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான்"

இறைவன் தன்னுடைய தூதர் நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை "அடியார்" என்றே விளிக்கிறான். இந்த உயர்தரமான சூழ்நிலையில் "அடியார்" என்கிற சொல்லை விட ஒரு சிறப்பான சொல் ஒன்று இருந்திருந்தால் நிச்சயம் அதைத்தான் இறைவன் பயன்படுத்தியிருப்பான் என்று இந்த வார்த்தைக்கு உலமாக்கள் விளக்கம் தருகிறார்கள். ((205/10) : تفسير القرطبي)

காரணம் ஒருவர் தன்னுடைய இறைவனாகிய அல்லாஹ்விற்கு முழுமையாக கட்டுப்பட்டு, தமது "*அப்திய்யத்*" எனும் அடிமைத்தனத்தை வெளிப்படுத்தினால் இவ்வுலகிலும், மறு உலகிலும் மாபெரும் வெற்றியை பெற முடியும். ஓர் அடியானுக்கு பெருமிதத்தையும், கௌரவத்தையும் பெற்றுத்தரும். இறைவனுக்கு அடிமைத்தனத்தோடு நடப்பதால் மனித உள்ளங்களில் அன்பையும், சமுதாயத்தில் வரவேற்பையும் பெற முடியும்.

ஒரு மார்க்க மேதை இவ்விதம் கூறுகிறார், "அழகிய முறையில் நடந்து கொள்வதால் உள்ளம் எப்போதும் ஒளிமயமாக இருக்கும், முகம் பிரகாசமாக இருக்கும், செல்வச் செழிப்பில் மிக தாராளமான வளர்ச்சி ஏற்படும், மனித உள்ளங்களில் நேசத்தையும் நெருக்கத்தையும் பெற்றுத் தரும்" ((361 /7) : تفسير ابن كثير)

**முஸ்லிம்களே!** புனித மிஃராஜ் எனும் விண்ணுலக பயணம் இரவில் துவங்கியது, முதலில் மஸ்ஜிதுல் ஹராம் எனும் கஅபாவில் இருந்து தூய்மையான பைத்துல் முகத்தஸ் வரை நடை பெற்றது. அந்த பைத்துல் முக்கத்தஸ் பகுதியை சுற்றிலும் இறைவன் நற்பாக்கியங்களை பொழிந்திருக்கிறான். பள்ளிவாசல்கள் நிறைந்து இருக்கும் ஒரு பகுதியில் இறைவனின் நற்பாக்கியங்கள் நிறைந்திருக்கும் என்கிற ஓர் உண்மையையும் இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டும். பூமியில் இறைவனுக்கு மிகவும் பிடித்தமான இடம் பள்ளிவாசல்கள் அமைந்திருக்கும் பகுதிகள்தாம் என்பதை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَحَبُّ الْبِلاَدِ إِلَى اللَّهِ مَسَاجِدُهَا

"ஊர்களில் அல்லாஹ்விற்கு மிகவும் பிடித்தமான பகுதி (அந்த ஊர்களில் அமைந்திருக்கும்) பள்ளிவாசல்களாகும்" (671 : مسلم)

பிறகு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணை நோக்கிய பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அந்த சமயத்தில் அவர்கள் விண்ணில் நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களை கண்டார்கள்.

*(தொழுகை கடமையாக்கப்பட்ட இந்த புனித மிஃராஜ் இரவில் சிறப்பு பயான் நிகழ்ச்சிகள் மற்றும் திக்ர்கள் நடத்தலாம் என்றும், மேலும் இறைவனுக்காக நன்றி கூறும் நோக்கில் சிறப்பு தொழுகை தொழுவது கூடும் என்றும், அதனைத் தொடர்ந்து பகலில் நோன்பு வைப்பதும் மார்க்கத்தில் வரவேற்கத் தகுந்தது என்றும், இந்த புனித பயணம் அவர்களின் நனவிலேயே நடைபெற்றது என்றும் இந்த ஐக்கிய அரபு அமீரக அரசின் பத்வா மிக தெளிவாக கூறுகிறது. பத்வாக்களை அவ்காபின் இணைய தளத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம் - மௌலவி அபூஸாலிஹ் பிலாலி)*

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணை நோக்கி பயணம் மேற்கொண்ட போது ஒவ்வொரு வானத்திலும் நபிமார்களை கண்டார்கள். நபி ஆதம், நபி இத்ரீஸ், நபி யூஸுப், நபி யஹ்யா, நபி மூஸா, நபி ஈஸா, நபி இப்ராஹீம் (அலைஹிமுஸ்ஸலாம்) என்று வரிசையாக நபிமார்களை கண்டார்கள். அது சமயம்,

مَرْحَبًا بِالنَّبِيِّ الصَّالِحِ وَالأَخِ الصَّالِحِ

"நல்ல நபியே வருக! நல்ல சகோதரரே வருக!" எனக் கூறி வரவேற்கப்பட்டார்கள்" (349 : البخاري)

நபிமார்கள் அனைவருமே நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இன்முகத்தோடு வரவேற்றார்கள். இதில் நமக்கு ஒரு தெளிவு இருக்கிறது. அதாவது இந்த மார்க்கம் ஒரே கட்டமைப்பில்தான் ஏற்படுத்தப் பட்டுள்ளதை நாம் புரிந்து கொள்ள

வேண்டும். அவர்கள் அனைவரும் ஒரே மார்க்கத்தைத்தான் நிலை நிறுத்தியுள்ளார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த நபிமார்கள் தொடர்ந்து கட்டிக்காத்து வந்த மார்க்கத்தையும், இறை தூதுச் செய்தியையும் இறுதியாக வந்த இறைதூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பரிபூரணமாக ஆக்கி வைத்தார்கள். ஆக அனைத்து நபிமார்களின் மார்க்கமும் ஒன்றுதான், அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்று அவர்கள் அனைவரும் அழைப்பு பணி செய்தார்கள். ஆனால் ஒரு சில மார்க்க சட்டங்களில் மட்டுமே வேறுபாடு இருந்து வந்தன. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (21:25)

وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلاَّ نُوحِي إِلَيْهِ أَنَّهُ لاَ إِلَهَ إِلاَّ أَنَا فَاعْبُدُونِ

"உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் "நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவனில்லை; என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹ்யி அறிவிக்காமலில்லை"

மேலும் பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (42:13)

شَرَعَ لَكُمْ مِنَ الدِّينِ مَا وَصَّى بِهِ نُوحًا وَالَّذِي أَوْحَيْنَا إِلَيْكَ وَمَا وَصَّيْنَا بِهِ إِبْرَاهِيمَ وَمُوسَى وَعِيسَى أَنْ أَقِيمُوا الدِّينَ

"(நம்பிக்கையாளர்களே!) நூஹ்வுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கி இருக்கின்றான். ஆகவே, (நபியே!) நாம் உங்களுக்கு வஹ்யி மூலம் அறிவிப்பதும், இப்ராஹீம், மூஸா, ஈஸா முதலியவர்களுக்கு நாம் உபதேசித்ததும் (என்னவென்றால், "நீங்கள் ஒருமித்து ஓரிறை கொள்கையுடைய உண்மையான) மார்க்கத்தை நிலைநிறுத்துங்கள்"

அதாவது, ஏக இறைவன் ஒருவன் என்கிற கொள்கை, அவனுக்கு முழுமையாக கீழ்படிந்து நடப்பது, இறைதூதர்கள், வேதங்கள், மறுமை நாள் ஆகியவற்றை நம்பிக்கை கொள்வது போன்ற அனைத்தையும் இறைவனே கடமையாக்கினான். ஆனால் ஒவ்வொரு உம்மத்துகளின் ஷரீஅத் சட்டங்களில் வேறுபாடுகள் இருந்தன. காரணம் அந்த அந்த உம்மத்துகளின் நிலையை கவனித்தும், அந்த அந்த காலச் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் இந்த வேறுபாடுகள் அமைந்திருந்தன. ((10/16) : تفسير القرطبي)

ஒவ்வொரு வானத்தையும் கடந்த பிறகு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஸித்ரதுல் முன்தஹா"வை அடைந்தார்கள். இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (53:15-17)

عِنْدَهَا جَنَّةُ الْمَأْوَى* إِذْ يَغْشَى السِّدْرَةَ مَا يَغْشَى* مَا زَاغَ الْبَصَرُ وَمَا طَغَى

"அதன் சமீபத்தில்தான் (நல்லடியார்கள்) தங்கும் சுவனபதி இருக்கின்றது. அந்த மரத்தை மூடியிருந்தவை அதனை முற்றிலும் மூடிக்கொண்டன. (அதிலிருந்து அவருடைய) பார்வை விலகவும் இல்லை; கடக்கவும் இல்லை!"

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தமது முன்னிலையில் அழைத்து வந்து பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் மிகச் சிறப்பாக அவர்களை கண்ணியப்படுத்தினான். இறைவனை நேருக்கு நேராக சந்திப்பதின் பரவச நிலையையும், அவனோடு நேரடியாக பேசி மகிழும் இன்பத்தின் உச்ச நிலையையும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுபவித்தார்கள்.

**அல்லாஹ்வின் அடியார்களே**! பயனுள்ள பல படிப்பினைகளும், ஆழமான அறிவுரைகளும் இங்கு உள்ளன. இந்த விண்ணுலக பயணத்தின் மூலம் தொழுகையின் சிறப்பை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் மார்க்கத்தின் உயரிய நோக்கம் என்பது படைத்தவனை அடைந்து கொள்வதிலும், படைப்புகளுக்கு நன்மை செய்வதிலுமே இருக்கிறது. ஆம் தொழுகையின் மூலம் நாம் இரக்கமுள்ள நாயனை அடைந்து கொள்ளமுடியும். தொழுகை என்பது ஒரு சில அசைவுகளை கொண்ட சடங்கு அல்ல, இறைவனோடு நெருங்குவதற்கான வணக்கமாகும். எல்லாம் வல்ல ஏக இறைவன் தன்னுடைய தூதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்வருமாறு கூறுகிறான்: (96:19)

وَاسْجُدْ وَاقْتَرِبْ

"(நபியே! உங்களது இறைவனுக்குச்) சிரம் பணிந்து வணங்கி (அவனை) அணுகுவீராக!"

வணக்க வழிபாடுகளிலேயே அதிகமான கூலி கிடைப்பது இந்த தொழுகையில்தான். ஹஜ்ரத் ஸயீத் இப்னு முஸய்யிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள், "ஜமாஅத்தோடு ஐந்து வேளை தொழுகையில் யார் பேணிக்கையோடு இருக்கிறாரோ நிச்சயமாக அவர் நிலம் மற்றும் கடல் முழுவதையும் வணக்கத்தால் நிரப்பி விடுகிறார். ((162 /2) : حلية الأولياء)

*(ஸஈத் இப்னு முஸய்யிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மார்க்க அறிவில் தேர்ச்சி பெற்ற மிகவும் புகழ் பெற்ற தாபியீன்களில் ஒருவர். பல அரசர்கள் தங்கள் மகளை இவர்களுக்கு திருமணம் முடிக்க விருப்பம் தெரிவித்தார்கள். என்ற போதிலும் அவற்றை நிராகரித்து விட்டு, மிகவும் ஏழ்மையில் இருந்த ஸஹாபி அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகளையே மணமுடித்து கொண்டார்கள். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஜமாஅத் தொழுகையை மஸ்ஜித் நபவியில் முதல் வரிசையில் நின்று நிறைவேற்றியுள்ளார்கள். மஸ்ஜித் நபவியில் உஸ்தாதாக சேவை செய்துள்ளார்கள். இவர்களிடம் பயின்றவர்கள் பிற்காலத்தில் மாபெரும் இமாம்களாக திகழ்ந்துள்ளார்கள் - வரலாற்றுக் குறிப்பில் இருந்து மௌலவி அபூஸாலிஹ் பிலாலி)*

எனவே யார் தொழுகையை மிகச் சரியாக பேணுதலோடு, தொழுகையின் ருகூ மற்றும் சஜ்தாக்களை சரிவர நிறைவேற்றி வருகிறாரோ நிச்சயம் அவர் பாராட்டுக்குரியவர். இதேபோன்று தன்னுடைய பிள்ளைகளுக்கும் தொழுகையின் அவசியத்தை வலியுறுத்தி அவர்களை பண்படுத்த வேண்டும்.

மிகப்பெரிய பொக்கிஷமாக பகரா சூராவின் இறுதி வசனங்கள் இந்த புனித பயணத்தில் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கிடைத்த மாபெரும்

கிருபையாகும். இறைவனுக்கு இணை வைக்காத நிலையில் இந்த உம்மத்திற்கு பாவ மன்னிப்பு கிடைக்கும் அரும்பாக்கியமும் இந்த பயணத்தின் மூலம் கிடைத்தது.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (விண்ணுலகப் பயணத்திற்காக) இரவில் அழைத்துச் செல்லப்பட்ட போது "ஸித்ரதுல் முன்தஹா" வரை அவர்கள் கொண்டுசெல்லப்பட்டார்கள். அப்போது நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மூன்று சிறப்பு(கட்டளை)கள் வழங்கப்பட்டன. அவையாவன: 1. ஐவேளைத் தொழுகைகள் வழங்கப்பட்டன. 2. அல்பகரா அத்தியாயத்தின் இறுதி வசனங்கள் அருளப்பெற்றன. 3. அவர்களுடைய சமுதாயத்தாரில் அல்லாஹ்வுக்கு இணையேதும் வைக்காதவர்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தும் பெரும்பாவங்கள் மன்னிக்கப்(படுவதாக அறிவிக்கப்)பட்டது" (279 : مسلم)

கண்ணியமான அருட்கொடையாக கொடுக்கப்பட்ட பகரா சூராவின் இறுதி வசனங்கள் மூலம் பல்வேறு வகையான தீமைகளில் இருந்து பாதுகாப்பு பெற்றுவிட முடியும். தேவையற்ற சர்ச்சைகளில் இருந்தும் விடுபட முடியும்.

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الآيَتَانِ مِنْ آخِرِ سُورَةِ البَقَرَةِ، مَنْ قَرَأَهُمَا فِي لَيْلَةٍ كَفَتَاهُ

"அல்பகரா' எனும் (2 வது) அத்தியாயத்தின் இறுதி இரண்டு வசனங்களை (285, 286) இரவில் ஓதுகிறவருக்கு அந்த இரண்டுமே போதும்!" (متفق عليه)

புனித மிஃராஜ் இரவு பயணம் நன்கொடையின் பயணமாக அமைந்துள்ளது. சங்கையும், தியாகமும் நிறைந்த பயணமாகும். நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏழாவது வானத்தில் வைத்து சந்தித்தார்கள். அந்த உயர்வான இடத்தில் இருந்து கொண்டு அருமையான ஒரு அன்பளிப்பை தந்தார்கள்.

لَقِيتُ إِبْرَاهِيمَ لَيْلَةَ أُسْرِيَ بِي فَقَالَ: يَا مُحَمَّدُ أَقْرِئْ أُمَّتَكَ مِنِّي السَّلاَمَ، وَأَخْبِرْهُمْ أَنَّ الجَنَّةَ طَيِّبَةُ التُّرْبَةِ، عَذْبَةُ الْمَاءِ، وَأَنَّهَا قِيعَانٌ، وَأَنَّ غِرَاسَهَا سُبْحَانَ اللَّهِ، وَالْحَمْدُ لِلَّهِ، وَلاَ إِلَهَ إِلاَّ اللَّهُ، وَاللَّهُ أَكْبَرُ

"புனித மிஃராஜ் பயணத்தின் போது நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்தித்தேன். அப்போது, "முஹம்மதே! உமது சமுதாயத்திற்கு என்னுடைய ஸலாமை சொல்லுங்கள், மேலும், 'சொர்க்கம் மிகவும் தூய்மையான மணலை கொண்டுள்ளது, நீர் மிகவும் சுவையானதாகும், (ஆனால்) மரங்களற்ற சமநிலை பூமியாக இருக்கிறது. அதன் விதைகள், "ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி, வ லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்" என்பதாகும்" என்று நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்னிடம் கூறினார்கள்"

என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (3462 : الترمذي)

இதுதான் திக்ர் செய்வதின் சிறப்பாகும். திக்ர் செய்வதால் கிடைக்கும் புகழும், சிறப்புமாகும். எந்த விபத்துகளாலும் பாதிப்படையாத வலுவான அடித்தளத்தை இந்த திக்ர் மூலம் ஏற்படுத்த முடியும். எவ்வளவு பெரிய காற்று அடித்தாலும் சேதமடையாது. வேறு எந்த காரணிகளாலும் கொஞ்சம் கூட பாதிப்படையாது. இவ்வளவு வலுவான மரங்களை திக்ர் மூலம் சொர்க்கத்தில் நாம் உருவாக்கினால்தான் நாளை மறுமையில் அதன் பலனை நாம் பெற முடியும். சுகம் தரும் நிழலில் இளைப்பாற முடியும் என்பதை நாம் விளங்க வேண்டுமே!

யா அல்லாஹ்! சிறந்த சொற்களை பேசும் பாக்கியத்தையும், அழகிய முறையில் நற்காரியங்கள் செய்யும் பாக்கியத்தையும் எங்கள் அனைவருக்கும் நீ தருவாயாக!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! இறைவனுக்கு பிடித்தமானவற்றை, பொருத்தமானவற்றை எடுத்து நடக்க வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித மிஃராஜ் பயணத்தை பற்றி சிந்திப்பவர்களுக்கு மிகப் பெரிய அத்தாட்சி இருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் மனிதர்களின் சொல்லும் செயலும் சில வேளைகளில் ஒரு தனி மனிதனையோ அல்லது ஒட்டுமொத்த சமூகத்தையோ பாதித்து விடுகிறது. புறம் பேசுவதின் மோசமான விளைவை இதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். அது மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கி விடும். கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இதனால் பகை உணர்ச்சி வளரும், கருத்து வேற்றுமை அதிகரிக்கும், இணக்கத்தையும் நெருக்கத்தையும் உடைத்தெறிந்து விடும், அரவணைப்பையும் அன்பையும் முற்றிலும் ஒழித்து விடும்.

எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (49:12)

وَلاَ يَغْتَبْ بَعْضُكُمْ بَعْضًا أَيُحِبُّ أَحَدُكُمْ أَنْ يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ تَوَّابٌ رَحِيمٌ

"உங்களில் ஒருவர் மற்றெவரையும் புறம் பேச வேண்டாம். உங்களில் எவனும் தன்னுடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள் வெறுப்பீர்களே! (புறம் பேசுவதும் அவ்வாறே. இவ்விஷயங்களில்) அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (பாவத்திலிருந்து) விலகுபவர்களை அங்கீகரிப்பவனும் கிருபை செய்பவனாகவும் இருக்கின்றான்"

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேரடியாக சொர்க்கத்தையும், நரகத்தையும் கண்டார்கள். சுவனத்தில் அல்லாஹ் தஆலா தன்னுடைய நல்லடியார்களுக்கு எவ்விதமான ஏற்பாடுகளையும், வசதி வாய்ப்புகளையும் செய்துள்ளான்

என்பதையும் கண்கூடாக கண்டுகொண்டார்கள். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

قَالَ اللَّهُ: أَعْدَدْتُ لِعِبَادِي الصَّالِحِينَ مَا لاَ عَيْنٌ رَأَتْ، وَلاَ أُذُنٌ سَمِعَتْ، وَلاَ خَطَرَ عَلَى قَلْبِ بَشَرٍ، فَاقْرَءُوا إِنْ شِئْتُمْ:

"எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதரின் உள்ளத்திலும் (கற்பனையிலும்) உதித்திராத இன்பங்களை என் நல்லடியார்களுக்காக நான் (சொர்க்கத்தில்) தயார்படுத்தி வைத்துள்ளேன்" என்று அல்லாஹ் கூறினான். நீங்கள் விரும்பினால்: (32:17)

فَلاَ تَعْلَمُ نَفْسٌ مَا أُخْفِيَ لَهُمْ مِنْ قُرَّةِ أَعْيُنٍ

"அவர்கள் செய்த (நற்)காரியங்களுக்குக் கூலியாக நாம் அவர்களுக்காக (தயார்படுத்தி) மறைத்து வைத்திருக்கும் கண் குளிரக்கூடிய (சன்மானத்)தை எவராலும் அறிந்துகொள்ள முடியாது. (அவ்வளவு மேலான சன்மானங்கள் அவர்களுக்கு தயார் படுத்தப்பட்டுள்ளன)" என்னும் இறைவசனத்தை ஓதிக் கொள்ளுங்கள்" (متفق عليه)

ஒவ்வொரு மனிதனுக்கும் சுவனத்தின் மேல் ஆசை வர வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடை இறைவன் செய்தான். அந்த சொர்க்கத்தை அடைவதற்காக ஆர்வம் வர வேண்டும், எனவே படைத்தவனுக்கு முழுமையாக கீழ்படிந்து நடக்க வேண்டும், அவனுடைய படைப்புகளிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் சுவனத்தை பெற்று வெற்றியடைய முடியும். சுவனத்தில் பல்வேறு வகையான இன்பங்களையும் வசதி வாய்ப்புகளையும் பெற முடியும்.

யா அல்லாஹ்! எங்கள் அனைவருக்கும் சுவனத்தை தருவாயாக! மேலும் அந்த சுவனத்தை நோக்கியே எங்களுடைய சொல் செயலை ஆக்கி வைப்பாயாக!!

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً



www.sunnathwaljamath.com

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும்,

தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.
யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக

நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).